<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 52/2016 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | பிரபாகரன் | நாள் | 29.04.2024 |
| தகப்பனார் பெயர் | கந்தசாமி | | |

**<u>1 முதல் 5 மற்றும் 7 முதல் 9 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-</u>**

50) ஆவண எண்.490/1975ல் ச.எண்.227/1ல் கண்ட 1320 சதுரடி நிலத்திற்கும், அதேபோல் மற்ற ஐந்து சர்வே எண்களில் கண்டுள்ள 1.48 ஏக்கர் நிலத்திற்கும் தடவழி பாதை காட்டப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி 1320 சதுரடி நிலமும் 1048 ஏக்கர் நிலமும் யூனியன் கழிவுநீர் வாய்க்காலுக்கு மேற்குபுறமாக அமைந்துள்ளது என்றால், மேற்படி 1.48 ஏக்கர் நிலம் மட்டும் மேற்குபுறம் உள்ளது. மேற்படி 1320 சதுரடி நிலம் யூனியன் கழிவுநீர் வாய்க்காலுக்கு கிழக்கு புறம் உள்ளது.

51) ஆவண எண்.490/1975ல் மேற்படி இரு நிலங்களுக்கும் தடவழியாக மேற்படி 1975ம் வருட கிரயப்பத்திரத்தில் பி.டி.குருநாத செட்டியார், மேச்சேரி செட்டியார் வீடுகளுக்கு வடக்கிலும், மாரியம்மன் கோவில் தெரு மற்றும் மெயின் ரோட்டிற்கு மேற்கிலும், என செக்குபந்தி விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. என் முன் விற்பனையாளர்களுக்கு மேற்படி தடவழிதான் காட்டப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

52) என் முன் விற்பனையாளர்களுக்கோ, அவரது முன் விற்பனையாளர்களுக்கோ தாவா 2-வது அயிட்டமாக காட்டப்பட்டுள்ள ச.எண்.226/8ல் காட்டப்பட்டுள்ள தடவழி குறித்து அவர்களது ஆவணங்களில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால், சரியல்ல. மேற்படி ச.எண்.226/8ற்கு கிழக்கில் காட்டப்பட்டுள்ள நிலம் அரசு புறம்போக்கு நிலம் என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. மேற்படி ச.எண்.226/8 நிலமானது பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட நிலம் என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை.

53) எனவே பிரதிவாதிகளின் பட்டா நிலத்தை பொறுத்து எவ்வித சட்டப்படியான உரிமையும் இன்றி என் முன் விற்பனையாளர்கள் போலியாக ஒரு ஆவணத்தை ஏற்படுத்திக்கொண்டு, அதில் தடவழி காட்டி எனக்கு மோசடியாக விற்பனை செய்துள்ளனர் என்றாலும், அவ்வாறு ஒரு தடவழி இல்லை என்றாலும், சரியல்ல. அவ்வாறு மேற்படி கிருஷ்ணசாமி செட்டியாருக்கும், ராமலிங்கத்திற்கும் பிரதிவாதிகளின் பட்டா நிலங்களை பொறுத்து ஆவணங்கள் ஏற்படுத்த எவ்வித உரிமையும் இல்லை என்றால், சரியல்ல.

54) டி.கே. நாகராஜன் வகையறா அவர்களது கிரய ஆவணமான 490/1975 ல் காட்டியுள்ள பி.டி.குருநாத செட்டியார், மேச்சேரி செட்டியார் வீடுகளுக்கு வடக்கிலும், மாரியம்மன் கோவில் தெரு மற்றும் மெயின் ரோட்டிற்கு மேற்கிலும், என்ற செக்குபந்தி விவரத்தை தான் என் முன்விற்பனையாளர்களது பத்திரத்தில் சொல்லியிருக்க வேண்டும் என்றாலும், அவ்வாறு இன்றி பிரதிவாதிகளின் நிலத்தை தடவழியாக காட்டியுள்ளது தவறானது என்றாலும், சரியல்ல.

55) மேற்படி ச.எண்.226/8 ல் உள்ள நிலம் தொடர்பாக நஞ்சுண்டன் மற்றும் விஸ்வநாதன் ஆகியோர்கள் பிரதிவாதிகள் மீது இதே நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி யூனியன் கழிநீர் கால்வாயை ஒட்டி மேற்காக உள்ள வீடு மேற்படி நஞ்சுண்டன் மற்றும் விஸ்வநாதன் ஆகியோர்களது என்றால், சரிதான். மேற்படி வீடுகளை தாண்டிதான் என் வீடு உள்ளது என்றால், சரிதான். ராமலிங்கம் என்பவர் நஞ்சுண்டன் மற்றும் விஸ்வநாதன் ஆகியோர்கள் மீது இதே சொத்து சம்மந்தமாக வேறு ஒரு வழக்கை இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர் என்றால், அது குறித்து எனக்கு தெரியாது.

56) மேற்படி ராமலிங்கம் என்பவர் ஆவண எழுத்தர் என்பதால், இதே போன்று பல மோசடி ஆவணங்களை ஏற்படுத்தியுள்ளார் என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி ராமலிங்கமோ, கிருஷ்ணசாமியோ ச.எண்.226/8 ல் உள்ள நிலத்திற்கு தங்கள் பெயரில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், வழிதடத்திற்கு பட்டா

எதுவும் தரவில்லை.

57) அதனால், மேற்படி பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட நிலங்களை மோசடியாக வழித்தடமாக காட்டி என் முன் விற்பனையாளர்களுக்கும், எனக்கும் விற்பனை செய்துள்ளார்கள் என்றால், சரியல்ல. நான் இவ்வழக்கில் வசதி உரிமை பரிகாரம் கோரி எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். அதனால், பிரதிவாதிகளின் நிலத்தை நான் சட்டத்திற்கு புறம்பாக பயன்படுத்தும் நிலையில் பிரதிவாதிகள் அதனை தடுக்க அவர்களுக்கு உரிமை உள்ளது என்றால், சரியல்ல. உண்மையான உரிமையாளருக்கு எதிராக நான் எவ்வித உரிமையும் கோர இயலாது என்றால், சரியல்ல. என் வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளபடி செய்யப்படவேண்டும் என்றால், சரியல்ல.

ஒம்/−திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.